Registered No. M-4345.

# யுத்த சஞ்சிகை.

மலர் I.] 1941-ம் ௵ ஜூலை ௴ 11௳, வெள்ளிக்கிழமை. [இதழ் 17

## வாரச் செய்திக் குறிப்புகள்.

### 1. ஜெர்மனியிலும், பிரிட்டனிலும், இதர இடங்களிலும் ஆகாய விமானப்போர்.

ஜெர்மனி ரஷ்யாவுடன் சண்டை போடுவதில் தன்னுடைய முழு கவனத்தையும் செலுத்திக் கொண்டிருக்கும் போது, பிரிட்டிஷ் ஆகாய விமானப் படை அந்த சந்தர்ப்பத்தை நன்ருக உபயோகித்துக் கொண்டு வருகிறது. பட்டப்பகலில் வடக்கு பிரான்சிலும், ஜெர்மனியிலும் வெடி குண்டுகள் மும்முரமாகப் போடப்பட்டு வருகின்றன. இராக்காலங்களிலும், பிரிட்டிஷ் விமானப்படை எதிரியின் முக்கியமான லட்சியங்களைத் தாக்கிக்கொண்டு வருகிறது. மேற்கு ஜெர்மனியிலும், வடமேற்கு ஜெர்மனியிலும், யுத்தத்திற்கு உணவூட்டும் தொழிற்சாலைகளும், யந்திரசாலைகளும், கப்பல் கட்டும் சாலைகளும் இருப்பதால், அந்தப் பிரதேசங்களைப் பிரிட்டிஷ் விமானங்கள் இடைவிடாது தாக்கிக்கொண்டிருக்கின்றன. இதை வழக்கமாக இசவரை செய்துவந்த போதிலும், ஹிட்லரின் ரஷ்ய வேட்டைக்குப் பிறகு, வழக்கத்துக்கு அதிகமாக வெடி குண்டுகள் தாக்குதலின் மும்முரம் பலப்பட்டிருக்கிறது. இது ரஷ்யாவுக்கு ஒருவிதமாக உதவி செய்யும் நோக்கத்துடன் செய்யப்படுகிறது. மத்திய ஜெர்மனியில் இப்போது இராக்கால நேரம் குறுகியிருப்பதாலும், ஜெர்மனியின் கிழக்கு பட்டாளங்களின் போக்குவரத்து சாதனங்கள் அதிக தூரம் நீண்டிருப்பதாலும், பிரிட்டன் நேராக ரஷ்யாவுக்கு உதவி செய்வது முடியாத காரியம். ஒருக்கால் ரஷ்யா தோல்வியடையுமானல், இலையுதிர்காலத்தில் ஜெர்மனி மேற்கு நோக்கித் திரும்பிப் பிரிட்டனைத்தாக்க நினைத்திருக்கும் ஏற்பாடுகள், பிரிட்டிஷ் விமானங்களால் இப்போது நாசமாக்கப்படுகின்றன என்று ராய்ட்டரின் விமான நிருபர் கூறுகிருர்.

ஜெர்மனி கிழக்கு நோக்கிச் சென்றபோது, வடமேற்கு ஐரோப்பாவில் ஏராளமான ஆகாய விமானங்களை வைத்துவிட்டுப் போயிருக்கிறது. ரஷ்ய யுத்தத்தில் புதிதாகத் தயார் செய்யப்பட்ட விமான ஓட்டிகள் உபயோகப்படுத்தப்பட்டு வருகிருர்கள். அனுபவம் நிறைந்த விமான ஓட்டிகள் வடமேற்கு ஐரோப்பாவில் நிறுத்தப்பட்டிருக்கிருர்கள். இப்போது ஜெர்மனியின் வடமேற்குக் கடற்கரை ஓரம், புதிதானதும், பளுவானதுமான பிரிட்டிஷ் வெடிகுண்டு விமானங்களால் கடுமையாகத் தாக்கப்பட்டுவருகிறது. ஒவ்வொரு இரவும், ஜெர்மன் கப்பல் சாலைகளையும், சப்மரீன் கப்பல்கட்டும் சாலைகளும், பிரிட்டிஷ் விமானங்கள் தாக்கிக்கொண்டு வருவதில், ஒரு முக்கியமான பலன் ஏற்பட்டிருக்கிறது. அதாவது, அட்லாண்டிக் கடலில் நடக்கும் யுத்தத்தில் ஜெர்மானியர்களுடைய முயற்சி மிகக் குறைந்திருக்கிறது. இன்னெரு பலனும் எதிர்பார்க்கப்படுகிறது. ரஷ்யப் பட்டாளத்தைத் தாக்குவதற்காக அனுப்பப்பட்ட ஜெர்மன் விமானப்படை, மேற்கு ஐரோப்பாவில் பிரிட்டிஷ் விமானங்கள் செய்யும் நாசத்தைத் தடுப்பதற்காக, திரும்பி வரும்படியான நிலைமை ஏற்பட்டாலும் ஏற்படலாம்.

ஜெர்மனியின் நூதனமான, கடைசியாகச் செய்யப்பட்ட, 'மெசர்ஸ் ஷிமிட்' என்ற போர் விமானங்களை விட, புதிதாகச் செய்யப்பட்ட 'ஸ்பிட்பைர்' என்ற பிரிட்டிஷ் விமானங்கள் பல விதங்களில் உயர்ந்தவை என்பது இப்போது ருசுப்படுத்தப்பட்டது. 'மெசர்ஸ் ஷிமி -109' என்பது ஜெர்மனியின் சிறந்த விமானம். அது 36,000 அடிக்கு மேல் யாதொரு கஷ்டமுமில்லாமல் பறந்து, திறமையாக வேலை செய்யக்கூடியது. ஆனல் 'ஸ்பிட்பைர்' விமானங்கள் அவ்வளவு உயரத்தில் பறக்கும் விமானங்களைக்கீழே இழுத்து, சுட்டு, நாசம் செய்திருக்கின்றன.

சென்ற வாரத்திய செய்திகளில், பிரிட்டிஷ் 'ஸ்பிட்பைர்' விமானங்களும், இதர வெடிகுண்டு விமானங்களும், ஜெர்மனியின் துறைமுகங்கள், போக்குவரத்து சாதனங்கள், யுத்த சாமான்கள் செய்யும் தொழிற்சாலைகள் முதலியவைகளை லட்சியங்களாகக் கொண்டு, வெடி குண்டு மாரி பொழிந்தன. பிரெமென், கலோன், தூஸ்பர்க், சேர்பர்க் கப்பல் சாலை, ராட்டர்டாம்மிலுள்ள எண்ணெய்க் களஞ்சியங்கள், இவைகளெல்லாம் பலமாய்த் தாக்கப்பட்டன. ரூர் பிரதேசத்தின் மத்தியிலுள்ள எஸ்ஸென் என்ற பட்டணம் தாக்கப்பட்டது. இங்குதான் க்ரூப்ஸ் என்ற உலகப் பிரசித்திப்பெற்ற இரும்பு, எஃகுத் தொழிற்சாலைகள்இருக்கின்றன. இதற்குப்பிரத்தியேகமான ரயில்வேக்கள் இருக்கின்றன. ஒரு பிரம்மாண்டமான மின்சார யந்திரசாலை இருக்கிறது. ரூர் பிரதேசம் சுரங்கங்களிலிருந்து எடுக்கப்படும் உலோகங்களுக்குப் பேர்போனது. அந்த உலோகங்களெல்லாம் க்ரூப்ஸ் தொழிற்சாலைக்கு வந்துகொண்டேயிருக்கும். இங்கிருந்து யுத்த சாமான்கள் செய்யப்பட்டு ஜெர்மனியின் பல யுத்த அரங்கங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

பிரிட்டிஷ் விமானங்கள் இந்த முக்கியமான இடத்தின் மேல் அநேக வெடி குண்டுகளைப்போட்டன. பல திக்குகளிலிருந்தும், வெவ்வேறு உயரங்களிலிருந்தும் வெடி குண்டு விமானங்கள் பாய்ந்து தாக்கின. ஏழு விமானங்கள் அரை மணிநேரம் ஒரே லட்சியத்தைத் தாக்கிக்கொண்டேயிருந்தன. பல இடங்களில் நெருப்புப்பற்றிக்கொண்டு எரிந்தது. இரும்புப் பட்டரைகளும், இரும்புத் தொழிற்சாலையைச் சேர்ந்த சில கட்டடங்களும் வெடிகுண்டுகளினல் பழுதாக்கப்பட்டன. பிரிட்டிஷ் விமானங்கள் பலத்த எதிர்ப்புக் கிடையே இந்தக் காரியங்களைச் செய்தன. ஜெர்மன் விமானங்கள், கீழேயுள்ள தூரதிருஷ்டி வெளிச்சங்களின் உதவிகொண்டு, பிரிட்டிஷ் விமானங்களைத் தாக்கின. ஆனல் பிரிட்டிஷ் விமானங்கள் அவைகளோடு கடுமையாகப் போர்புரிந்து அவைகளை விரட்டித் துரத்திவிட்டன.

வடக்கு பிரான்சின் மேல் பிரிட்டிஷ் விமானங்கள் பலமாகத் தாக்கியதாக சென்ற வாரச் செய்திகள் கூறுகின்றன. ஹேசி புரூக்—செயிண்ட் ஓமார் பிரதேசத்தில் உள்ள ரயில்வேக்களை லட்சியங்களாகக் கொண்டு பிரிட்டிஷ் விமானங்கள் வெடிகுண்டுகளைப் போட்டன. வடக்கு பிரான்சில் நடந்த விமானச் சண்டையில் 18 எதிரி விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. பிரிட்டனுக்கு 10 விமானங்கள் நஷ்டமாயின.

ஒரு பிரிட்டிஷ் வெடிகுண்டு விமானத்தைச்சேர்ந்தவர்கள் மனோதைரியத்தினல் எப்படித் தப்பினர்கள் என்ற கதையை, பிரிட்டிஷ் விமான மந்திரி சபைச் செய்திநிலையம் கூறுகிறது. ஒருநாள் மாலை நேரத்தில், மர்வில் ஆகாய விமானச்சாலை பிரிட்டிஷ் விமானங்களால் தாக்கப்பட்டது. ஒரு பிளென்ஹீம் வெடி குண்டு விமான ஓட்டி ஜெர்மன் விமானத்தால், சுடப்பட்டதில், கழுத்தில் காயம்பட்டது; ஒரு முக்கிய ரத்தக்குழாய் இரண்டுதுண்டாய்விட்டது. உடையெல்லாம் ரத்தமாய்விட்டது. உடனே விமானத்தில் இருந்த கவனிப்பாளன், பெருவிரலினல் அவன் கழுத்தில் அழுத்திக்கொண்டு, ரத்தம் ஓடி வருவதை நிறுத்தினன். இதனல் விமான ஓட்டி விமானத்தைச் சரிவர ஓட்டமுடிந்தது. இந்த சமயத்தில் வேருெரு ஜெர்மன் விமானம் வந்து தாக்கியது. வெடிகுண்டு விமானத்தின் பின்புறத்தில் இருந்த பீரங்கிக்காரன் எதிரி விமானத்தின் மேல் வெடிகுண்டுகளைச் சரமாரியாகப் பொழியவே, ஜெர்

மன் விமானத்தின் ஒரு சிறகு அறுந்து விழுந்து விட்டது; விமானமும் இரண்டு மூன்று துண்டுகளாக ஆகாயத்தில் உடைந்துபோய்விட்டது.

பிறகு, பிரிட்டிஷ் விமானம் மற்ற விமானங்களுடன் சேர்ந்து திரும்பி, பிரிட்டன் மார்க்கமாகப் புறப்பட்டது. வழியில் ஒன்பது ஜெர்மன் விமானங்கள் அவைகளைத் தாக்கின. ஒரு ஜெர்மன் விமானம், விமான ஓட்டி உட்காரும் இடத்தில் தாக்கப்பட்டு, தலைகீழாகச் சுற்றிக் கீழே பாய்ந்தது; விமான ஓட்டி உயிரிழந்தான்.

இதெல்லாம் நடக்கும்போது, காயப்பட்ட பிரிட்டிஷ் விமான ஓட்டிக்கு கவனிப்பாளன் சிகிச்சை செய்து கொண்டிருந்தான். கழுத்திலிருந்து ரத்தம் அதிகமாக வெளிவந்துவிட்டதால் விமான ஓட்டி மூர்ச்சையாய் விட்டான். பிறகு அவன் சமாளித்துக்கொண்டு, விமானத்தை ஓட்டிச்சென்றான். பிரிட்டனுக்குமேல், விமானப்படை வந்து சேர்ந்ததும், விமான ஓட்டி தன்னால் விமானத்தை இனிமேல் ஓட்ட சக்தி இல்லையென்று கூறிவிட்டு, விமானத்தில் இருந்த மற்றவர்கள் விமான விரிப்புக் குடை மூலம் கீழே இறங்கிவிடும்படி சொன்னான். ஏனென்றால், தன்னால் ஓட்ட முடியாததாலும், எழுந்து குதிப்பதற்குச் சக்தியில்லை யாதலாலும் தானும், விமானத்தோடேயே மடிந்துவிட எண்ணினான்.

ஆனால் அவன் கூட இருந்த சகாக்கள் அதற்கு ஒப்பமாட்டோமென்று சொல்லிவிட்டார்கள். பிறகு விமானத்தைக் கீழே இறக்க முயற்சி செய்தபோது, அது தன்னைத்தானே சுற்றுவதற்கு ஆரம்பித்தது; யந்திரத்தின் ஒரு முக்கியமான பாகம் எதிரி விமானங்களோடு சண்டை செய்தபோது, அடிபட்டு விழுந்துவிட்டது. இருந்தபோதிலும், காயத்திலிருந்து ரத்தம் ஆறு போல ஓடிக்கொண்டிருந்த விமான ஓட்டி, சமாளித்து, சுற்றுவதை நிறுத்தி தரையில் அந்த விமானத்தைக் கொண்டுவந்து சேர்த்தான். அந்த விமான ஓட்டி இப்போது ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகிறான்.

எதிரிகளுடைய நாடுகளில் சென்று வெடி குண்டுகள் போட்டுக்கொண்டுவரும் முயற்சிகளில், பிரிட்டிஷ் ஆகாய விமானப் படை எதிரிகளுக்கு அதிக நஷ்டம் விளைவித்துக்கொண்டுவருகிறது. ஜூன் மாதத்தில் நஷ்டமடைந்த பிரிட்டிஷ் விமானங்கள் 160; நாசமடைந்த ஜெர்மன் விமானங்கள் 183. இது ஜெர்மனியிலும், ஜெர்மனிக்கு அடிமையாயிருக்கும் நாடுகளிலும் ஏற்பட்ட நஷ்டம்.

பிரிட்டனில் நடந்த விமானப் போர்களில், ஜூன் மாதத்தில் 52 ஜெர்மன் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன; பிரிட்டனுக்கு நஷ்டமான விமானங்கள் இரண்டேதான்! மத்தியதரைக் கடலில் அச்சு நாடுகள் 225 விமானங்களை இழந்தன; பிரிட்டன் 66 விமானங்களை இழந்தது. இதல்லாமல், 12 எதிரி விமானங்கள் சுட்டுக் கடலில் வீழ்த்தப்பட்டன. ஜூன் மாதத்தில் ஆகாய விமான நஷ்டங்கள் மொத்தம் எதிரிகளுக்கு 472-ம், பிரிட்டனுக்கு 228-ம் ஆகிறது.

### 2. ஆப்பிரிக்காவும் மத்தியதரைக் கடலும்.

அபிசீனியாவில் கோண்டாருக்குத் தென் கிழக்கில் 70 மைல் தூரத்திலுள்ள டெப்ரா டாபர் என்ற இடத்திலுள்ள இத்தாலிய தளகர்த்தர், தன்னுடைய துருப்புகளுடன் சரணடைய ஒப்புக்கொண்டார். இந்த இடத்தை நான்கு மாதங்களாகப் பாதுகாத்தும் பலனில்லாமற் போய்விட்டது. இத்தாலியர்கள் கையில் மிகுதியாயிருப்பது, கோண்டாரும், மற்றும் சில இடங்களுமே. திரிபோலி துறைமுகம், சிரிநெய்கா, டிரிபோலிடானியா, டெர்னா, பெங்காசி, எல் கஸாலா ஆகிய இடங்களின்மீது குண்டுகள் போடப்பட்டன. இப்போது அரசாங்க தருப்புகளும் தேசாபிமானத் துருப்புகளும், இத்தாலியின் கடைசி உயிர் நிலையாகிய கோண்டாரை முற்றுகையிட்டிருக்கின்றன.

லிபியாவில் உஷ்ணநிலை அதிகமாயிருப்பது தவிர வேறு விசேஷமில்லை.

அபிசீனியாவில் கல்லா சிடமோ பிரதேசத்தில் இத்தாலிய ஜனரல் கஸ்ஸீரா (வயது 62) சரணடைந்துவிட்டதால் பலவிதமான யுத்த சாமான்கள் ஏராளமாகக் கிடைத்தன. ஜூன்மீ 21-ம் தேதி முடிய ஜிம்மா பிரதேசத்தில் கைப்பற்றப்பட்ட 15,000 கைதிகளுள், 12,000 பேர் இத்தாலியர்கள்.

இரண்டு லக்ஷம் பேர்களுடைய இத்தாலிய கிழக்காப்பிரிக்கா சைன்யம் இப்போது முறியடிக்கப்பட்டது. 2,000 மைல் முகப்பில் பல இடங்களில் சண்டை போட்டனர். ஆறு வாரங்களுக்குப் பிறகு, இப்போது, அபிசீனியாவில் பெருமழை பெய்தது. இதனால் சண்டை சிறிது தடைப்பட்டிருக்கிறது.

விரோதிகள், மத்யதரைக்கடலிலுள்ள சைப்ரஸ் தீவை தாக்கி நிகோஷியாவின்மீது குண்டுகளைப் போட்டனர். உயிர்ச்சேதமாவது அல்லது பொருள் சேதமாவது உண்டாகவில்லை.

அபிசீனியாவில் இன்னும் ஒன்பது இத்தாலிய ஜெனரல்கள் சரணாகதியடைந்தனர் என்றும், 1,200 இத்தாலியர்கள் உள்பட, 5,000 பேர் கைதியாக்கப் பட்டார்களென்று கெய்ரோ சர்க்கார் அறிக்கை தெரிவிக்கின்றது.

### 3. அமெரிக்காவும், அட்லாண்டிக் கடலும்.

அமெரிக்க காலாட்படைகளுடன், பீரங்கியணிப் படைகளும் சேர்ந்து, 22 'டாங்கி' எதிர்ப்புப் பட்டாளங்கள் திரட்டப்படுவதாக, யுனைடெட் ஸ்டேட்ஸ் யுத்த மந்திரியாகிய மிஸ்டர் ஸ்டிம்ஸன் தெரிவித்தார். இந்த புதிய 'டாங்கி' எதிர்ப்புப் பட்டாளம், உலகத்தில் எந்த சைன்யத்திலும் கிடையாது. இது அதிக சக்தியையும் 3 அங்குல பீரங்கிகளையும் உடையது. பரீக்ஷார்த்தமாக மோட்டார் யுத்த டாங்கிகளைக்கொண்ட பட்டாளம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. முன்பு 15,550 பேர் இருந்ததை இப்போது 14,000-க் குறைத்தபோதிலும், சுடும் சக்தி நூற்றுக்கு ஐம்பது விகிதம் இன்னும் அதிகமாகவே இருக்குமென்று தெரிகிறது. ஜப்பானிய கப்பல்களுக்கு பனமா கால்வாய் மூடப்படும் விஷயமாக எதுவும் சொல்ல மிஸ்டர் ஸ்டிம்ஸன் மறுத்துவிட்டார். அமெரிக்க பிரதம தளபதியாகிய ஜெனரல் ஜார்ஜ் மார்ஷல், மிஸ்டர் ஸ்டிம்ஸனிடம் சமர்ப்பித்த அறிக்கையிலிருந்து, இப்போது அமெரிக்க ராணுவ பலம் 8 மடங்கு அதிகமாயிருக்கிறதென்றும், அதில் மொத்தம் 14 லக்ஷம் பேர் இருக்கிறார்களென்றும், ஆகாயப் படையில் 54 பகுதிகளிருக்கின்றனவென்றும் தெரியவருகின்றது.

ஜப்பான் பஸிபிக் மகா சமுத்திரத்தில் அமைதியை நிலைநாட்டத் தீர்மானித்துவிட்டதாக, உத்யோகபூர்வமாக ஜப்பானிய சர்க்கார் தெரிவித்திருக்கின்றதென்று அமெரிக்க உதவி மந்திரியாகிய மிஸ்டர் சம்னர் வெல்ஸ், பத்திரிகைகள் மகா நாட்டில் கூறினார்.

பிரஞ்சு வடக்காப்பிரிக்காவுக்கு அமெரிக்கா சாமான்களை மீண்டும் ஏற்றுமதி செய்ய, பிரிட்டன் சம்மதித்திருக்கின்றது என்று விஷியிலிருந்து வந்த செய்தியால் தெரிகின்றது. பிரஞ்சு வடக்காப்பிரிக்காவிலிருந்து பிரான்சுக்கு ஏற்றுமதி செய்யக்கூடாதென்ற நிபந்தனையின் பேரில்தான் பிரிட்டன் சம்மதித்திருப்பதாகத் தெரிகின்றது.

கனடாவில் அமெரிக்க பொருளாதார விஷயங்களில் ஒரு திட்டம் ஏற்பட்டிருக்கின்றது. இதனால் பொது மக்கள் பெட்ரோல் முதலியவைகள் உபயோகிப்பதைக் குறைத்துக்கொள்வார்களென்றும் தெரிகின்றது.

அமெரிக்கா 6 லக்ஷம் பேல் பஞ்சு பிரிட்டனுக்கு சப்ளை செய்யும். பிரிட்டன் மாதத்திற்கு இரண்டு லக்ஷம் பேல்கள் பஞ்சு வாங்கும் என்றும் தெரிகின்றது.

நியூயார்க்கிலுள்ள ஜெர்மன் ஸ்தானிகரின் காரியதரிசியாகிய ஜூலியஸ் ஆட்டோ என்பவர் தன் ஸ்நான அறையில் தூக்குப் போட்டுக்கொண்டு இறந்து விட்டார். ஆஸ்ட்ரியா தேசத்திலுள்ள தன்னுடைய சொந்த ஊருக்குப் போக முடியாமலிருந்ததே காரணம் என்று அவருடைய டாக்டர் தெரிவித்தார். இதற்கு முன் வாரத்தில், வாஷிங்டனிலுள்ள ஜெர்மன் காரியாலயத்தில் 'கிளார்க்' வேலை செய்யும் குர்ட் நொஸ்டிஸ் என்ற ஜெர்மானியர் தற்கொலை பண்ணிக்கொண்டார்.

அமெரிக்காவிலிருந்து பிரதி மாதமும் யுத்த தளவாடங்களும் வெடி மருந்துகளும், 20-லிருந்து 25 கப்பல்களில் மத்திய கிழக்கரங்கத்திற்கு செங்

கடல் மூலமாக அனுப்பப்படுகின்றன. விமானங்களை மத்திய கிழக்கரங்கத்தில் பூட்டுவதைத்தணிக்கை செய்ய அமெரிக்க இயந்திர நிபுணர்களும் அனுப்பப்பட்டிருக்கின்றனர். அமெரிக்காவில் ஏற்றுமதி செய்து செங்கடலில் இறக்குமதி செய்ய சரியாக 100 நாட்களாகின்றனவாம். கப்பல்போக்கு வரத்துக்கள் இப்போது இன்னும் அதிகமாகத் துரிதப்படுத்தப்பட்டிருக்கின்றது.

அட்லாண்டிக்கடலில் வடக்கே கிரீன் லாந்திற்கு அருகில் உள்ள ஐஸ் லாந்து ஒரு கேந்திர ஸ்தானமாயிருக்கின்றது. அங்குள்ள பிரிட்டிஷ் கடற்படைக்குப் பதிலாக அமெரிக்க கடற்படை போய்ச் சேர்ந்திருக்கின்றது என்று பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் தெரிவித்தார். ஜெர்மனி இந்த கேந்திரஸ்தானத்தை ஆகாய, கடல் தளமாக உபயோகிக்க விடக்கூடாதென்றும் கூறினார்.

## 4. கிரீசும், இத்தாலியும்.

கிரீஸ் தேசத்து மன்னராகிய ஜார்ஜ் என்பவர் தென் ஆப்பிரிக்காவிற்குச் சென்றிருக்கின்றார். இவரைத் தென் ஆப்பிரிக்காவிற்குக் கவர்னர்-ஜெனரலாக இருக்கும் சர் பாட்ரிக் டன்கன் வரவேற்பார் என்று தெரிகிறது. ஜார்ஜ் மன்னருடன், கிரீஸ் தேசத்து இளவரசராகிய பால் என்பவர், கிரீஸ் இளவரசி, கிரேக்க முதன் மந்திரி, கிரேக்க ஆகாய மந்திரி, தொழில் மந்திரி, கப்பல் மந்திரி, ஆகியவர்கள் உள்பட 136 பேர் சென்றிருக்கின்றார்கள். பால் இளவரசரும், இளவரசியும், தற்காலம் தென் ஆப்பிரிக்காவிலேயே தங்கியிருப்பார்கள். மன்னரும் முதன் மந்திரியும் எவ்வளவு காலம் இங்கு இருப்பார்களென்பது தெரியவில்லை. இவர்கள் பிரிட்டிஷ் சர்க்காருடனும் நேச தேச சர்க்கார்களுடனும் சலந்து ஆலோசிக்க இங்கிலாந்திற்கு அநேகமாகப் போவார்கள்.

கிரேக்க சைன்யத்தை அதிகப்படுத்தும் விஷயத்தை மன்னா முக்யமாக கவனிப்பார். கிரீஸ் யுத்தத்திற்குப் பிறகு கிரீஸ் கடற் படையில் பாதி பிரிட்டிஷ் மத்யதரைக் கடற் படையுடன் சேர்ந்துகொண்டது. கிரேக்க தேசத்தை விட்டு வெளியேறிய துருப்புகள், ஈஜிப்டிலுள்ள கிரேக்க குடியேற்ற நாட்டு மக்கள், கிரேக்க யுத்தத்தில் தப்பிய ஆகாய விமானப் படையின் பெரும் பகுதி, உலகத்தில் பல பாகங்களிலுமுள்ள கிரேக்கர்கள் (பத்து லக்ஷத்திற்கு மேலிருக்கும்) ஆகிய இவர்களைக் கொண்ட ஒரு படை திரட்டப்படுகின்றது யுத்த மந்திரியும், கடற் படை மந்திரியும், கிரேக்க துருப்புகளுடன் மத்ய கிழக்கு அரங்கத்திலேயே இருப்பார்கள்.

## 5. பால்கன்ஸ், துருக்கி, இராக், சிரியா, முதலியன.

சிரியாவின் கேந்திரஸ்தானமாகிய பல்மைராவை நேசதேசத்தினர் கைப்பற்றியது சிரியா சண்டை முடிவின் ஒரு அம்சமாகும். இப்போது ஹாம்ஸ் பட்டணத்தைப் பிடிக்க ஒரு வழி ஏற்பட்டுவிட்டது. ஹாம்ஸ் பிடிப்பட்டால், விஷி (பிரஞ்சு) துருப்புகள் இரண்டாகிவிடும். சுயேச்சை பிரஞ்சு தளகர்த்தர் ஜெனரல் காட்ரூக்ஸ், சிரியாவிலும், லிபானனிலும் சுதந்திரத்தைக் கொடுப்பதாக பிரகடனம் செய்ததனாலும், விஷிக்கு ஆதரவளித்தவர்கள், பிரஞ்சு தேசத்தின் உண்மையான உரிமைகளுக்குப் பாதகமாகப் போர் செய்வதை உணர்ந்து கொண்டதாலும், விஷி துருப்புகளின் சக்தி மிகவும் பலஹீனமடைந்து கொண்டுவருகின்றது. பிரிட்டிஷ் ஆகாயப் படையும், ஆஸ்ட்ரேலிய ஆகாயப்படையும் பல்மைராவின் வீழ்ச்சியில் பெரும்பங்கெடுத்துக்கொண்டன.

பல்மைரா, டமாஸ்கஸ் பட்டணத்திற்கு 150 மைல் வடகிழக்கிலிருக்கின்றது. இது நாஸிகளின் ஆகாயதளமாயிருந்தது. பதின் மூன்று நாள முற்றுகைக்குப் பிறகு பல்மைரா நேசதேசத்தினர் கைவசமாயிற்று. பல்மைராவுக்கு வடகிழக்கில் 120 மைல் தூரத்தில் பிரிட்டிஷ் மோட்டார் படை முன்னேறிச்செல்கின்றது. மற்றொரு பிரிட்டிஷ் மோட்டார் படை மோசூல்—அலெப்போ ரயில் பாதை வழியாகச் செல்ல முயற்சி செய்துகொண்டிருக்கின்றது. பெரூட், மீண்டும் பிரிட்டிஷ் விமானப்படையால் தாக்கப்பட்டது. சுயிடா மீதும், நஸ்ருல்லாவிலுள்ள விஷி ஆகாயதளத்தின் மீதும் குண்டுகள் போடப்பட்டன. ஹைபாவை நோக்கி வந்து கொண்டிருந்த விரோதி விமானமொன்று சுட்டு வீழ்த்தப்பட்டது.

டமாஸ்கஸில் இப்போது அமைதி நிலவுகின்றது. ஆஸ்திரேலியாவிலிருந்து இங்கு கோதுமை இறக்குமதி செய்ததினால் உணவு கஷ்டம் குறைந்து விட்டது. தந்தி, தபால் போக்கு வரத்துகள் சரிப்படுத்தப்பட்டன.

நேசதேசத்தினர் சிரியாவில் முன்னேற்றமடைவதைக்கண்ட விஷித்துருப்புகள், கைதியானதும் சுயேச்சை பிரஞ்சுத்துருப்புகளுடன் சேர்ந்து சண்டை செய்கின்றன.

சிரியாவில், ஆஸ்திரேலியர்கள் பீரட்டைப் பிடித்தார்கள்; இந்தியத் துருப்புகள் காமேசிலியைச் சேர்ந்தன; சரணாகதி யடையும்படி பிரிட்டன் கொடுத்த நிபந்தனைகளை விஷி அரசாங்கம் ஒப்புக்கொள்ளவில்லை.

பல்மைரா பிடிபட்ட பிறகு விஷித்துருப்புகள் பெரூட், திரிபோலி, ஹாம்ஸைச் சேர்ந்த முகமோ ணப் பிரதேசத்திற்குப் பின் வாங்கியிருக்கின்றன. மஸார் மலையிலிருந்துவரும் ரோட்டை விஷித்துருப்புகள் நாசமாக்கிவிட்டன. இதனால் நேச தேசத்துருப்புகள் முன்னேறி வருவது தடைப்பட்டிருக்கின்றது.

இந்திய துருப்புகள் டீர் எஸ் ஸார் என்ற பட்டணத்தைப் பிடித்துக்கொண்டன. ஐந்து பீரங்கிகளும், இரண்டு ஆகாய விமானங்களும், இன்னும் பல விமானங்களும் இவர்கள் கைப்பற்றினர். டீர் எஸ் ஸார் என்ற பட்டணம் யூப்ரடிஸ் நதிக்கரையில், பல்மைராவிற்கு 120 மைல் வடகிழக்கிலுள்ளது. இது வடசிரியாவிலுள்ள ஹாம்ஸ், ஹாம், அலெப்போ பட்டணங்களைப் பிடிக்க ஒரு தளமாக உதவும்.

நேச தேசத்துருப்புகள் டாமூர் ஆற்றைக்கடந்து பெரூட்டிற்குப் பத்து மைல் தூரத்தில் வந்திருக்கின்றன. பல்மைராவிலிருந்து வந்த நேசத்துருப்புகள் ஹாம்ஸுக்குச் செல்லும் வழியில் பெட்ரோல் பைப் லைனைப் பிடித்திருக்கின்றனர். கடற்கரைக்கும் டமாஸ்கஸிற்கும் மத்தியில் ஜெஸ்ஸீனுக்கு 7 மைல் வடமேற்கிலுள்ள ராரிப்பட்டணமும் நேச துருப்புகள் கைவசமாயிற்று. பெரூட்டிலிருந்து ராயக்கிற்குப்போகும் ரயிலில் இருந்த இரண்டு ரயில் 'வாகன்' நிறைய இருந்த வெடிகுண்டு மருந்துகளுக்குத் தீ வைக்கப்பட்டது. ரயில் பாதைகளை, விஷிக்காரர்கள் அழித்துக்கொண்டே பின் வாங்குகின்றனர்.

இந்தியத் துருப்புகள் டெல் கோட்செக்கிற்கு 18 மைல் மேற்கிலுள்ள டெமூர் காபெஸ்ஸைப் பிடித்துக் கொண்டு ஹாம்ஸை நோக்கி முன்னேறிச் செல்கின்றன.

## 6. கப்பல் நிலைமை.

6,000 டன்கள் எடையுள்ள விரோதி 'சப்ளை' கப்பல், பிரஞ்சு கரையோரத்தில் லா டூக்கே என்ற இடத்திற்கு அருகில் 'டார்பிடோ'வால் தாக்கப்பட்டது. இது இரண்டு யுத்த கப்பல்களின் பந்தோபஸ்தில் போய்க்கொண்டிருந்ததாம்.

நார்வே கரையருகில் சென்றுகொண்டிருந்த இரண்டு ஜெர்மன் 'சப்ளை' கப்பல்கள் மேல், பிரிட்டிஷ் வேவு பார்க்கும் விமானப்படை குண்டுகள் போட்டுத் தாக்கின. டச்சுக் கரையோரத்தில் இரண்டு விரோதிக் கப்பல்கள் தாக்கப்பட்டன. ஒரு அமெரிக்க ஹட்ஸன் ஆகாய விமானம் 3.000 டன்கள் எடையுள்ள விரோதிக் கப்பலை மூழ்கடித்தது. மற்றொரு ஹட்ஸன் விமானம் சில மைல்களுக்கு அப்பால் சென்று கொண்டிருந்த மற்றொரு கப்பலைத் தாக்கி பெருத்த சேத முண்டாக்கிற்று. இங்கிலீஷ் கால்வாயில் 4,000 டன் எடையுள்ள கப்பல் மீது பிரிட்டிஷ் விமானப் படை இரண்டு தடவை குறி தவராமல் சுட்டது. ஹாலந்து தேசத்திற்கு அருகில், வடகடலில், பிரிட்டிஷ் விமானப்படை, நான்கு விரோதி வேவு கப்பல்களை நாசமாக்கியது. அவைகளுள் ஒன்று மூழ்கிவிட்டது. பெல்ஜியன் கடற் கரையோரத்தில 4,000, 6,000 டன்கள் எடையுள்ள இரண்டு ஜெர்மன் சப்ளை கப்பல்கள் மீது வெடி குண்டுகள் போடப்பட்டன.

துருக்கிக் கொடியை பரக்க விட்டுக்கொண்டு துருக்கியைச் சேர்ந்த மத்யதரைக் கடற் பகுதியில் சென்று கொண்டிருந்த விஷி (பிரஞ்சு) உதவிக் கப்பலைப் பிரிட்டிஷ் ஆகாயப் படை மூழ்கடித்தது.

10,000 டன் எடையுள்ள கோரிலியா என்ற இத்தாலிய யுத்த கப்பலை மத்யதரைக் கடற்படையைச் சேர்ந்த பிரிட்டிஷ் சப்மரீன் மூழ்கடித்தது. இது இத்தாலியின் நான்காவது பெரிய யுத்த கப்பல். இதற்கு முன் இதைப் போன்ற மூன்று இத்தாலிய பெரிய யுத்த கப்பல்கள் கிரீஸிலுள்ள மடாபன் முனைக்கருகில் முழுகடிக்கப்பட்டன.

### 7. தூரக்கிழக்கு அரங்கம்.

சீனாவிலுள்ள சுங்கிங் பட்டணத்தின் மேற்கு எல்லைப்புறத்தில் 24 ஜப்பான் ஆகாய விமானங்கள் வெடிகுண்டுகளைப் போட்டன. அவைகளுக்கு எதிராக விமான பீரங்கிகள் சுட்டன.

சென்ற நான்கு வருடங்களாக நடந்து கொண்டிருக்கும் சீன-ஜப்பான் யுத்தத்தில் மொத்தம் 1,09,250 ஜப்பானியர்கள் மாண்டனர். கொல்லப்பட்ட சீனக்காரர்களின் எண்ணிக்கை 20,15,000 என்று ஜப்பானியர்கள் கூறுகின்றனர்.

சுங்கிங்கை இரண்டு தடவை ஜப்பானிய கடல் விமானங்கள் தாக்கின. கால நிலை அனுகூலமாயிருந்ததால் ஷீவான் பிரதேசத்தின் மேல் ஜப்பானிய விமானங்கள் ராணுவ லடசியங்களைக் குறியாக வைத்து பல வெடிகுண்டுகளைப் போட்டன. சீன ஆகாய விமானம் ஒன்றும் எதிர்க்கவில்லை. ஆனால் ஆகாய விமான எதிர்ப்பு பீரங்கிகள் மும்முரமாகச் சுட்டன.

சுங்கிங்கிலுள்ள பிரிட்டிஷ் ஸ்தானிகர் காரியாலயம் ஜப்பான் விமானங்களால் தாக்கப்பட்டு அழிக்கப்பட்டன. ஒன்றிரண்டு வாரங்களுக்கு முன்பு இந்த காரியாலயத்தைச் சேர்ந்த இரண்டு கட்டடங்களில் ஒன்று குண்டு பட்டு இடிந்து விழுந்தது.

### 8. விஷி.

விஷி மந்திரி சபை முன்பாக அட்மிரல் தார்லான் பொதுஉடமைக் கக்ஷிகளின் நடவடிக்கைகளை அடக்கவேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று தெரிவித்தார்.

விஷி, துருக்கி மூலமாக சிரியாவிற்கு யுத்த சாமான்களை அனுப்பக்கூடாதென்று துருக்கி தடுத்துவிட்டது.

### 9. ஜெர்மனியின் ஆதிக்கத்திலுள்ள நாடுகள்.

ஹாலந்திலுள்ள பல டச்சு இயக்கங்களையும் ரோமன் கத்தோலிக்க வகுப்பினரும், இதர மத சம்பந்தமான வகுப்பினர்களும் சேர்ந்து நடத்தும் கக்ஷிகளையும் ஜெர்மன் உத்தியோகஸ்தர் தடை செய்திருக்கின்றார்.

### 10. நடு நிலைமை நாடுகள்.

ஸ்வீடனுக்கு, 144 ஆகாய விமானங்களை ஒப்பந்தப் பிரகாரம் அமெரிக்கா சப்ளை செய்யாததால் ஸ்வீடன் அமெரிக்கா மீது வழக்கு தொடர்ந்திருக்கின்றது.

தென் அமெரிக்காவிலுள்ள அர்ஜென்டைனாவில் நாஜிகள் வியாபார ஸ்தலங்களில் வேலை செய்பவர்களிடம் யுத்தநிதி வசூல் செய்வதைச் சர்க்கார் கண்டுபிடித்து விசாரணை செய்துவருகின்றனர்.

பெரு-ஈக்வேடார் சண்டை :—ஈக்வேடாரில் மூன்று பட்டணங்களை, பெரூ ஆகாய விமானங்கள் குண்டுகள் போட்டுத்தாக்கின.

### 11. ரஷ்யாவும், ஜெர்மனியும்.

சென்ற வாரத்திய ரஷ்ய யுத்த நிலைமை இந்த இதழில் இரண்டு கட்டுரைகளில் நன்றாக விளக்கப்பட்டிருக்கிறது. கடைசியாக வந்த செய்திகள் கூறுவதாவது :—லெபால் பிரதேசத்தில், ரஷ்யா பெருத்த வெற்றியடைந்திருக்கிறது. நூற்றுக் கணக்கான இறந்த சிப்பாய்களை விட்டுவிட்டு ஜெர்மானியர்கள் ஓடிவிட்டார்கள். 102 ஜெர்மன் விமானங்கள் நாசமாக்கப்பட்டன. பெஸ்ஸரேபியாவைக் கைப்பற்றியதாக ஜெர்மானியர்கள் கூறுகிறார்கள். ஆனால் விவரங்களைப்பற்றி மௌனம் சாதிக்கிறார்கள். ஜெர்மனிக்கு உதவியாக 16,000 ஸ்பானிஷ்காரர்கள் பர்லினில் வந்து சேர்ந்திருக்கிறதாகத் தெரிகிறது.

---

# ரஷ்யாவில் ஜெர்மனியின் நஷ்டங்கள்.

## மாஸ்கோவைப்பற்றி ஹிட்லரின் பகற் கனவு.

## "ஸ்டாலின் லைனி"ல் வரப்போகும் பெரும் போர்.

### ரஷ்ய குரங்குச்சண்டை தந்திரமும், ஜெர்மானிய குறடா பிரிவு முயற்சியும்.


ரஷ்யாவில் தன்னுடைய இஷ்டப்படி எல்லா விஷயங்களும் நடக்கும் என்ற ஹிட்லருடைய எண்ணம் நிறைவேறவில்லை என்பது விளக்கமாகத் தெரிகிறது. இரண்டு வாரங்களுக்குப்பிறகு, விசாலமான யுத்த அரங்கத்தில், ரஷ்யர்கள் மும்முரமாகப் போர் புரிந்துகொண்டு வருகிறார்கள். அவர்கள் சில பிரதேசங்களை இழந்திருக்கிறார்கள் என்பது உண்மைதான்; ஆனால் அவைகள் பெரும்பாலும் ரஷ்யாவுக்குச் சேர்ந்தவையல்ல; 1939-ம் இந்த யுத்தம் ஆரம்பித்ததன் பிறகு ரஷ்யாவுக்குச் சேர்ந்தவைகள். "ஸ்டாலின் லைன்" என்ற பிரதம ரஷ்ய பாதுகாப்பு ஏற்பாடுகளை நெருங்க நெருங்க, ஜெர்மானியர்கள் மேலும் மேலும் கஷ்டத்துக்குள்ளாகிறார்கள். பல பகுதிகளில், ரஷ்யர்கள் ஜெர்மனியர்களைத் திருப்பித் தாக்கி வெற்றிபெற்று வருகிறார்கள். யுத்தத்தைப்பற்றி வியாக்கியானம் செய்யும் அமெரிக்க நிபுணர்கள் ரஷ்யாவின் நிலைமையைப் பற்றி நம்பிக்கையுடன் பேசுகிறார்கள். அமெரிக்காவின் தேசிய 'ரேடியோ' சங்கத்தைச் சேர்ந்த மிஸ்டர் மார்டின் அக்ரோஸ்கி, விரைவில் வெற்றி பெறலாம் என்ற நம்பிக்கையை ஜெர்மானியர்கள் இழந்துவிட்டார்கள் என்று கூறுகிறார்.

ஜெர்மானியர்களுடைய முன்னேற்றம் குறைந்துகொண்டு வருகிறது என்பதை அவர்களுடைய சமாச்சார அறிக்கைகளே காண்பிக்கின்றன. அந்த அறிக்கைகளில் கூறப்பட்டவை பெரும்பாலும் உண்மையல்லவென்று அவைகளே ருசுப்படுத்துகின்றன. உதாரணமாக, ஆர்டிக் துறைமுகமாகிய மூர்மான்சிக்கைக் கைப்பற்றிவிட்டதாகவும், ரஷ்யாவுக்கு முக்கியமான ஒரு 'சப்ளை' வழியை அதனால் வெட்டிவிட்டதாகவும் ஜெர்மன் அறிக்கை கூறிற்று. ஆனால், இப்போது, அந்தத் துறைமுகத்தின்மேல் வெடிகுண்டுகள் போடப்பட்டன என்று ஒரு ஜெர்மன் அறிக்கை கூறுகிறது. இதல்லாமல், தெற்கிலிருக்கும் ரயில்வேயைப் பிடித்துவிட்டதாக ஜெர்மானியர்கள் அறிவித்தார்கள். அதுவும் பொய்யாயிற்று. ஆயிரக்கணக்கான ரஷ்ய சிப்பாய்கள், தங்களுடைய அரசியல் 'கமிசார்' (ஒரு பிரதேசத்தின் தலைவர்)களைக் கொலைசெய்துவிட்டு, பட்டாளத்தைவிட்டு ஓடிவிட்டார்கள் என்று ஜெர்மன் அறிக்கை கூறிற்று. ரஷ்ய அரசாங்கம் சில மாதங்களுக்கு முன் அரசியல் 'கமிசார்' பதவிகளைய அடியோடு அழித்துவிட்டார்களென்றால், இதன் பொய் நன்றாக விளங்கும்.

இதனால் ரஷ்யாவில் நெருக்கடியான நிலைமை இல்லை என்று கூறுவதாக நினைக்கக்கூடாது. ரஷ்யாவின் பிரதம ராணுவ அதிகாரிகள் உள்ள நிலைமையை நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். ஜெர்மானியர்களுடைய முதல் வெற்றிகளைக்குறித்து அவர்கள் பரபரப்படையாமல், சாவதானமாக இருக்கிறார்கள். அந்த வெற்றிகளில் சில கவலைக்கிடமான வெற்றிகள்தான். ஹங்கேரியர்களோடும், ருமேனியர்களோடும், கெலிஷியா, பெஸ்ஸரேபியா, பகுதிகளில், ஜெர்மானியர்கள் முன்னேறியிருக்கிறார்கள். ட்நீஸ்டர் நதியைச் சில இடங்களில் கடந்துவிட்டதாகவும், முன்பு ருமேனிய மாகாணமாயிருந்த புகோவினாவின் முக்கிய பட்டணமாகிய சர்நௌடியைப் பிடித்துவிட்டதாகவும் ஒரு ஹங்கேரிய அறிக்கை கூறுகிறது. ஆனால் பின்வாங்கிச்சென்ற ரஷ்யர்கள், இந்தப் பிரதேசத்தில் எதிரிகளுக்கு உபயோகமாகக் கூடிய எல்லா சாமான்களையும் தீயிட்டுக்கொளுத்திவிட்டார்கள்.

பியாலிஸ்டாக் பிரதேசத்தில், ஜெர்மன் துருப்புகள் குறடாவைப்போல இரண்டு பிரிவாகச்சென்று ரஷ்யத்துருப்புகளை வளைத்துக் கொண்டதுபோல, மின்சிக்கின் கிழக்கிலிருக்கும் ஜெர்மன் துருப்புகள் இரண்டு பிரிவாகச்செல்ல முயற்சிக்கின்றன. குறடாவின் வடக்கு பாகம், லீபெல் பிரதேசத்தில், பெரிசீனாவின் மேல்பாகங்களில் செல்ல முயற்சிக்கிறது.

## எவ்வித நிலைமைக்கும் பிரிட்டன் தயாராயிருக்கிறது !



பிரிட்டிஷ் பிரன் துப்பாக்கிகளைத் தூக்கிக்கொண்டு. மழைகாலங்களிலும் பனியால் மூடப்பட்டிருக்கும் ரஸ்தாக்களிலும் வேகமாக ஓடும் யந்திர சாதனங்களை மேலே படத்தில் காணலாம்.

குறடாவின் கிழக்கு பாகம் பொபுருயிஸ்க் பிரதேசத்தில், மின்சிக்குக்கு அருகாமையில், ஊடுருவிச் செல்ல முயற்சிக்கிறது. இந்த முயற்சி வெற்றி பெறுமானால் இரண்டு குறடா முனைகளும் ஸ்மோலென்ஸ்க் என்ற இடத்தில் சந்திக்கவேண்டும். இரண்டு பாகங்களிலும் ஜெர்மனி தன்னுடைய முழு பலத்தையும் கடுமையாக உபயோகப்படுத்துகிறது. ஆனால் இதுவரைக்கும் ஜெர்மனியின் லேசான படைகள் தான் பெரிசீனு ஆற்றைக் கடந்திருப்பதாகத் தெரிகிறது. ஸ்மோலென்ஸ்க் பட்டணம் ஜெர்மன் விமானங்களால் பலமாகத் தாக்கப்பட்டது. ஆனால் "ஆற்று யுத்தங்கள்" இன்னும் கடுமையாக நடந்து கொண்டிருக்கின்றன.

### ஹிட்லர் அடையப்போகும் திருப்தி.

மாஸ்கோவிலிருந்து ஜெர்மானியர்கள் இன்னும் வெகு தூரத்தில் இருக்கிறார்கள். இதைக்குறித்து ரஷ்யாவின் சமாச்சார நிலையத்தின் ('இன்பர்மேஷன்') போர்டு தலைவர் லோசோவ்ஸ்கி பின்வருமாறு கூறுகிறார்:—ஹிட்லருக்கும் நெப்போலியனுக்கும் ஒரு வித்தியாசம் இருக்கிறது; நெப்போலியனால் மாஸ்கோவுக்குச் செல்லமுடிந்தது; ஆனால் ஹிட்லர் ரஷ்யாவின் தலை நகரப்படத்தோடு தான் திருப்தி யடையவேண்டும்.

ஜெர்மானியர்களின் முன்னேற்றம் குறைந்ததற்கு மூன்று காரணங்கள் கூறலாம்:—(1) ஜெர்மனியால் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் ரஷ்யர்கள் குரங்குச் சண்டை தந்திரம் காட்டுகிறார்கள். (அதாவது விட்டுவிட்டுப் போர்புரிவது; ஓடி ஒளிந்து சண்டை செய்வது); (2) சில நாட்களாகக் கடுமையாகப் போர் செய்த ஜெர்மன் 'டாங்கி' களைச் சீர் திருத்தவேண்டியிருக்கிறது; (3) பரந்த ரஷ்யப் பாதைகளில் ஜெர்மன் வண்டிகளும் சாமான்களும் பிரயோசனமில்லாமல் போய்விட்டன.

ரஷ்ய யுத்தத்தில் ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பிக்கப்படுமென்றும் 'ஸ்டாலின் லைனுக்'காக கடுமையான போர் தொடங்கப்போகிறதென்றும் 'ஸ்டாலின் லைன்' பிரான்சிலிருந்து 'மாஜினோ லைனை'ப் போலல்லவென்றும், இயற்கைப் பாதுகாப்பு சௌகரியங்கள் ரஷ்யர்கள் நன்றாக உபயோகப்படுத்தியிருக்கிறார்களென்றும், யுத்தம் ஆரம்பித்த பிறகு புதிய யுத்த அரண்களைக் கட்டியிருக்கிறார்களென்றும், ஜெர்மன் செய்தி நிலையம் கூறுகிறது. ரஷ்யத் துருப்புகள் பாதுகாப்பு அரண்களுக்குச் செல்கின்றன. உள் நாட்டிலிருந்து 'ரிசர்வ்' படைகள் கொண்டுவரப்படுகின்றன. அடுத்த வாரத்திய யுத்த அரங்கத்தில் 'ஸ்டாலின் லைனுக்'காக நடக்கப்போகும் பெரும்போர் மற்ற விஷயங்களை மறைத்துவிடும்.

ரஷ்யப்பட்டாளம், ஜெர்மன் துருப்புகளைப் பல இடங்களில் திருப்பித்தாக்கியிருக்கிறது. ஆயிரக்கணக்காக இறந்துபோன ஜெர்மானியர்கள் உடைந்துபோன 'டாங்கி' கள், பழுதாக்கப்பட்ட ஜெர்மன் விமானங்கள் இவைகளெல்லாம் வெள்ளை ரஷியாவில் திவீனா ஆற்றின் கரையோரங்களில் சிதறிக் கிடக்கின்றன. மின்சிக்கு 120 மைல் வடகிழக்கிலுள்ள போலோதிஸ்க்கின் அருகிலுள்ள ஆற்றைத் தாண்டிய ஜெர்மானியர்கள் ரஷ்யத்தாக்குதலின் பயனாக ஆற்றின் அக்கரைக்குத் துரத்தப்பட்டார்கள். "எதிர்த்த எதிரித் துருப்புகளின் பெரும்பாகம், ஆற்றில் தங்களுடைய கல்லறைகளைக் கண்டன" என்று ரஷ்ய யுத்த அறிக்கை கூறிற்று.

### மூன்று இடங்களில் தோல்வி.

சென்ற வார முடிவில் ரஷ்யர்கள், ஜெர்மானியர்களை மூன்று இடங்களில் முறியடித்தார்கள். வடக்கில் லெனின் கிராடை நோக்கி முன்னேறிய ஜெர்மன் துருப்புகள் பின் தள்ளப்பட்டன. தெற்கில் இரண்டு இடங்களில் மாஸ்கோவை நோக்கி நெப்போலியன் சென்ற பாதையில் ஜெர்மன் துருப்புகள் செல்ல முயற்சித்தன; அவைகள் பலமாகத் தாக்கப்பட்டு பின்னடைந்தன. மற்ற இரண்டு பகுதிகளில் கடுமையான யுத்தம் நடைபெறுகிறது. இப்போதுள்ள நிலைமையை ரஷ்ய ராணுவ தலைமைக் காரியாலயம் பின் வருமாறு சுருக்கிக் கூறியிருக்கிறது:—(1) திவின் ஸ்கியிலிருந்து லெனின் கிராடுக்குப்போகும் வழியில் ஆஸ்டிரால் என்ற இடத்தில் சண்டை நடக்கிறது. ஜெர்மானியர்கள் அந்தப்பட்டணத்தை விட்டுத் துரத்தப்பட்டார்கள். நூற்றுக் கணக்கான 'டாங்கி' களையும் திரள்திரளான மோட்டார் உபயோகிக்கும் காலாட் படைகளையும் ஜெர்மானியர்கள் இழந்தார்கள். (2) போலோடிஸ்க் பகுதியில் ஜெர்மானியர்கள் தோற்கடிக்கப்பட்டார்கள். திவீனா ஆற்றை ரஷ்யர்கள் பலமாய் பாதுகாத்துவருகிறார்கள். (3) பாரிசோவ் பகுதியில் பெரிசீனா ஆற்றில் மின்சிக்குக் கிழக்கில் மும்முரமான யுத்தம் நடக்கிறது. இங்கு ரஷ்யத் துருப்புகள் ஜெர்மானியர்களைப் பலமாய்த்தாக்கின.

ஜெர்மனி எந்த முறையில் போர்புரிகிறதோ அதே முறையில் ரஷ்யா போர்புரிகிறது. நன்றாகப் பயிற்சி பெற்ற வாலிபமான ரஷ்யத் துருப்புகள் இப்போது

போரில் ஈடுபடுகின்றன. ஜெர்மானியர்களுக்கு மூச்சு விடுவதற்குக்கூட ரஷ்ய அரசாங்கம் அவகாசம் கொடுக்கப்போவதில்லை என்று லோசோவ்ஸ்கி கூறுகிறார். 12 நாள்களில் 7 லட்சம் ஜெர்மானியர்கள் 1,500 ஜெர்மன் விமானங்கள் 2,500 ஜெர்மன் 'டாங்கி' கள் ரஷ்யர்களால் நாசமாக்கப்பட்டன என்று அவர் கூறுகிறார். இதல்லாமல் பால்டிக் கடலிலும், கருங்கடலிலும் பல ஜெர்மன் கப்பல்கள் முழுகடிக்கப்பட்டன. பின்லாந்து வளைகுடாவில் ஒரு ஜெர்மன் சப்மரீனும் ரிகா வளை குடாவில் இரண்டு ஜெர்மன் யுத்தக்கப்பல்களும் நாசமாக்கப்பட்டன.

இனிமேல் ஜெர்மனி இன்னும் அதிகப்படியான நஷ்டங்களுக்குத் தயாராயிருக்கவேண்டும். ரஷ்யாவும் பிரிட்டனும் நெருங்கி ஒத்துழைத்து போர் புரிகின்றன. பிரிட்டிஷ் ராணுவக் கோஷ்டியின் எல்லா அங்கத்தினர்களும் மாஸ்கோ போய்ச்சேர்ந்து ரஷ்ய ராணுவத்தலைவர்களோடு கலந்து ஆலோசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

---

# ஜெர்மனி ரஷ்யாவைத்தாக்கியதன் நோக்கம்.

## ஹிட்லரின் எண்ணத்துக்கு ரஷ்யாவில் இடையூறுகள்.

### அச்சுநாடுகளல்லாத உலகத்தின் கடமை.

ஜெர்மனி ரஷ்யாவைத்தாக்கியதால், இந்த யுத்தம் உலக யுத்தமாய்விட்டது ரஷ்யாவைத் தாக்கவேண்டும் என்ற ஏற்பாடு அநேகமாதங்களுக்கு முன்பே செய்யப்பட்டது. மற்ற நாடுகளைச் செய்ததுபோல, தந்திர முறைகளால், ரஷ்யாவை ஒதுக்கித் தனிப்படுத்த முயற்சிசெய்யப்பட்டது. ஹங்கேரியையும், ருமேனியாவையும் ஜெர்மனியின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவந்து, ஜெர்மன்-துருக்கி ஒப்பந்தம் கையெழுத்திட்டது, இந்த ஏற்பாட்டின் முடிவான காரியம். பால்கன தீபகற்பம், ஈஜியன தீவுகள், கிரீட் முதலியவைகளைக் கைப்பற்றி, துருக்கியைத் திக்குமுக்காடும் நிலைமையில் ஜெர்மனி வைத்துவிட்டது ; ரஷ்யாவின் பலத்தையும் குறைத்துவிட்டது. ரஷ்யா தனிப்படுத்தப்பட்டதோடல்லாமல், பின்லாந்திலும், ரஷ்யமாகாணமாகிய யூக்ரயினிலும் ஜெர்மனி ரஷ்யாவுக்கு விரோதமாகப் பிரசாரம்செய்து தன்னுடைய நிலைமையைப் பலப்படுத்திக்கொள்ள ஏற்பாடுசெய்தது.

ஜெர்மனி ரஷ்யாவைத் தாக்கியதற்குப் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. ஹிட்லருக்கு, பாகு பிரதேசத்தில் உள்ள பெட்ரோலும், யூக்ரெயின் மாகாணத்திலுள்ள கோதுமையும், உலோகங்களும், அவசியம் வேண்டியிருக்கிறது. பாகு, குரோஸ்னி, இந்த இடங்களில், ஒரு வருஷத்தில் 290 லட்சம் டன் பெட்ரோல் உண்டாக்கப்படுகிறது. கூபான் யூக்ரெயினில் இருக்கும் செழிப்பான வயல்களில் விளையும் கோதுமை ஜெர்மனியின் உணவு குறைவாயிருப்பதை நிவர்த்திசெய்யலாம். யுத்தம் நீண்டகாலம் நடக்கும் ; பெட்ரோலும், கோதுமையும் இருந்தால் இன்னும் அதிகநாள் சமாளிக்கலாம்—எனபதுதான் ஹிட்லரின் நோக்கம்.

ரஷ்ய நாட்டு மக்களுக்கு மதசுதந்தரத்தைத் திருப்பிக்கொடுப்பதற்காக, ஜெர்மனி ரஷ்யாவைத்தாக்கியது என்று ரஷ்யர்களுக்கு ஒரு ஜெர்மன் அறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. இது எவ்வளவு தூரம் உண்மை என்பது சில விஷயங்களால் தெரியவரும். பாரிசில் (பிரான்சு) ரஷ்யர்களால் ஏற்படுத்தப்பட்ட மத சங்கத்தை ஜெர்மனியர்கள் கலைத்துவிட்டார்கள் ; தங்களுடைய ஆதிக்கத்தில் வந்த நாடுகளில், மதத்துக்கும், மத ஸ்தாபனங்களுக்கும், மத குருக்களுக்கும் எவ்வளவு தொந்தரவு கொடுக்கமுடியுமோ அவ்வளவு தொந்தரவு கொடுத்தார்கள் ; மாதா கோயில் பாதிரிகளைக் கைதுசெய்தார்கள் ; மத ஸ்தாபனங்களை அடியோடு ஒழித்தார்கள் ; மதத்திற்கு உண்மையாயிருந்தவர்களை சிறைப்படுத்தினார்கள் ; பலரைக் கொன்றுவிட்டார்கள்.

## தந்திரம் பலிக்கவில்லை.

'பால்ஷிவிஸ்ம்' என்ற பொதுவுடைமைக் கொள்கையை அழிப்பதற்காக ரஷ்ய யுத்தம் தொடங்கப்பட்டது என்று ஜெர்மனி கூறுகிறது. ஆனால் 1939-ல் தனக்குச் சௌகரியமானபோது அதே ரஷ்யாவுடன் ஜெர்மனி உறவாடி ஒப்பந்தம் செய்துகொண்டது. பிரிட்டனையும், அமெரிக்காவையும் ஏமாற்றுவதற்காக ஜெர்மனி இந்தப் புதிய தந்திரத்தை உபயோகப்படுத்திற்று ; ஆனால் அந்தத் தந்திரம் ஒரு சிறிதும் பலிக்கவில்லை. ரஷ்யாவைத் தாக்கியதற்கு மற்றொரு காரணம் சொல்லப்படுகிறது. ஜெர்மனியில் உள்நாட்டு அமைதி இல்லை என்றும், ஜெர்மானியர்களில் அநேகர் ஹிட்லரிடம் கொண்டுள்ள நம்பிக்கையை இழந்துவிட்டார்களென்றும், அந்த எண்ணத்தை கொஞ்சகாலம் வரைக்குமாவது மாற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் ஹிட்லர் ரஷ்யாவைத் தாக்கியதென்றும் கூறப்படுகிறது.

ஆனால், ஹிட்லரின் உண்மையான நோக்கம் ராணுவ சம்பந்தமானதும், அரசியல் சம்பந்தமானதும், என்பது நன்றாகத்தெரிகிறது. தனக்கு வேண்டிய பொருளாதார அனுகூலங்களை, போர் செய்யாமல் ரஷ்யாவிடமிருந்து வாங்க முயற்சித்திருக்கலாம். ஆனால் அப்படிச்செய்யவில்லை. ஏனென்றால் மத்திய கிழக்கரங்கத்திலும், மத்தியதரைக்கடற் பிரதேசத்திலும், பிரிட்டனுடைய ஆதிக்கத்தை ஹிட்லரால் குறைக்கமுடியவில்லை. பிரிட்டனும் அமெரிக்காவும் நெருங்கி ஒத்துழைக்கின்றன. செங்கடலில் அமெரிக்காவிலிருந்து சாமான்கள் வந்துகொண்டேயிருக்கின்றன. மேற்கில் இருப்பதைப்போல, கிழக்கிலும் பிரிட்டன் யுத்த தளவாடங்களில் அதிகப்படியான பலம் பெற்றுக்கொண்டுவருகிறது. ஆகையால் ரஷ்யாவை முதலில் தாக்கிவிட்டு, பிறகு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைத் தாக்கலாம் என்பதுதான் ஹிட்லரின் நோக்கம். ரஷ்யாவை அடிமை நாடாக்கிவிட்டால், அதைப் பல பிரிவுகளாகப் பிரித்து ரஷ்யாவின் கோதுமை வயல்கள், காடுகள், சுரங்கங்கள், எண்ணெய்ச்சாலைகள் முதலியவைகளை, ஜெர்மனிக்காகப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பது ஹிட்லரின் எண்ணம்.

## ரஷ்ய யுத்த சாதனங்கள்.

இந்த எண்ணம் நிறைவேறுவதற்குப் பல இடையூறுகள் இருக்கின்றன. ரஷ்யாவில் முழுவதும் பயிற்சிபெற்ற துருப்புகளும், பாதி பயிற்சிபெற்ற துருப்புகளும், ஜெர்மனியைவிட அதிகமாயிருக்கின்றன. யுத்த தளவாடங்கள் ஏராளமாயிருக்கின்றன. ரஷ்ய "டாங்கி"களும், ஆகாய விமானங்களும் அபரிமிதமாயிருக்கின்றன. ரஷ்யாவின் யுத்த "சப்ளை" தளங்கள் மேற்கு அரங்கத்திலிருந்து உள்நாட்டில் வெகு தூரத்தில் பல இடங்களில் இருக்கின்றன. ரஷ்யாவின் "பிராட் காஜ்" ரயில்வே, ரஷ்ய ரயில் வண்டித் தொடர்களைப் பிடித்தாலொழிய, ஜெர்மனிக்கு ஒரு சிறிதும் பயன்படாது. ரஷ்யாவின் ஐந்து-வருஷத் திட்டம்" சிறந்த யந்திர நிபுணர்களைத் தயார் செய்திருக்கிறது ரஷ்யாவின் விசாலமான இடங்களும், சதுப்பு நிலங்களும் தாங்கமுடியாத குளிரும், ஹிட்லருடைய எண்ணங்களைப் பாழாக்கக்கூடியவை. ரஷ்ய சிப்பாய்கள் யுத்த தந்திரத்தில் நிபுணர்கள். ஜெர்மனியர்கள் அவர்களுக்கு ஜன்ம விரோதிகள். அவர்களுக்கெதிராகத் தங்களுடைய சொந்த நாட்டைக் காப்பாற்ற அவர்கள் அதிக தைரியத்தோடு போர்புரிவார்கள் என்று சர் பர்னார்டு பேரிஸ் கூறுகிறார். இதல்லாமல் ரஷ்ய கப்பற்படை மிகப் பலம்பொருந்தியது. ரஷ்யாவுக்கு சப்மரீன் பலமும் உண்டு.

ஆனால், இந்த நிலைமையில் அச்சுநாடுகளுக்கு விரோதமாக இருக்கும் தேசங்கள் என்ன செய்யப்போகின்றன என்பது மிகவும் முக்கியமான விஷயம். குடியரசு கொள்கையும், பொதுவாக உலக நாகரீகமும், இந்த யுத்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அமெரிக்க அபிப்பிராயம் ரஷ்யாவுக்கு அனுகூலமாக இருக்கிறது. ஹிட்லரிசத்தை ஒழிக்கவேண்டும் என்ற பொது நோக்கத்தில் எல்லோரும் ஈடுபடவேண்டும் என்ற விஷயம் நன்றாக உணரப்படுகிறது. அமெரிக்காவுக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது ; தன்னால் கொடுக்கக்கூடிய எல்லா உதவிகளையும் ஒரே சமயத்தில் துரிதமாக பிரிட்டனுக்கு அனுப்பவேண்டும். ஹிட்லரிசத்தை ஒழிக்கவேண்டுமானால், அச்சுநாடல்லாத உலகம் தீவிர உணர்ச்சிபற்று எழுந்து, ஒரே மூச்சாக, இப்போதே, பெரு முயற்சி செய்தல்வேண்டும்.

# மத்திய கிழக்கரங்கமும், ரஷ்ய யுத்தமும்.

## இந்திய பிரதம தளபதியின் அபிப்பிராயம்.

### "நமது துருப்புகளுக்கு ஓய்வும், பலப்படுத்திக்கொள்ள அவகாசமும் கிடைத்தன."

இந்தியாவின் பிரதம தளபதியாக ஏற்படுத்தப்பட்ட ஜெனரல் சர் ஆர்ச்சிபால்ட் வேவெல், மத்திய கிழக்கரங்கத்தில் இருக்கும் யுத்த நிருபர்களிடம், சென்ற வெள்ளிக்கிழமை விடைபெற்றுக்கொண்டார். அப்போது, அந்த நிருபர்கள் செய்த வேலைக்காக அவர்களைப்பாராட்டி, பொதுவாக யுத்த நிலைமையைப் பற்றியும், சிறப்பாக மத்திய கிழக்கரங்கத்து நிலைமையைப்பற்றியும், பேசினர். அவர் கூறியதாவது :—

"நாம் பெரிய வெற்றிகளைப் பெற்றிருக்கிறோம்; தோல்விகளையும் பெற்றிருக்கிறோம். நம்முடைய யுத்த சாமான்கள் குறைவாக இருந்தன. எவ்வளவு யுத்த சாமான்கள் இருந்தாலும், இன்னும் அதிகமான சாமான்கள் வேண்டும் என்று விரும்புகிறோம். என்னுடைய தலைமையின் கீழ் இருந்த துருப்புகளும், துருப்புகளின் தளகர்த்தர்களும் மிக நன்றாக வேலை செய்தார்கள். அபிசீனிய யுத்தம் இப்போது முழுவதும் முடிந்துவிட்டதாகச் சொல்லலாம். தேப்ரா டேபர் சரணாகதியடைந்துவிட்டது; தென் கிழக்கு அபிசீனியாவில் உள்ள ஒரு சிறு பாகம் கூடியசீக்கிரம் சரணமடைந்துவிடும். பாக்கியாக நிற்பவை கோண்டார் என்ற இடமும் தேசியைச்சுற்றிச் சிதறி இருக்கும் எதிரியின் சில சிறு துருப்புகளும்தான். அபிசீனிய வெற்றி மிகவும் மகத்தான வெற்றி. ஜெனரல் கன்னிங்காமும், ஜெனரல் பிளாட்டும் மகாபெரிய காரியத்தைச் சாதித்திருக்கிறார்கள். ஏனென்றால், அந்தப் பிரதேசத்தில் 2 லட்சம் இத்தாலியத் துருப்புகள் இருந்தன என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்.

"சிரியா ஒருவிதமான கஷ்டமான பிரதேசம். அங்கு பலத்த எதிர்ப்பு இருந்தால், அதை ஜெயித்து கைப்பற்றுவது மிகவும் கஷ்டமான காரியம். ஆகையால் தான் நாம் கொஞ்சங்கொஞ்சமாக முன்னேற வேண்டியிருந்தது. கூடிய சீக்கிரம் விஷித் துருப்புகளின் எதிர்ப்பை முறியடித்து சிரியா முழுவதையும் கைப்பற்றலாம். முன்னர் நம்மோடு நேசத் துருப்புகளாகப் போர் புரிந்த பிரெஞ்சுக்காரர்களுக்கு எதிராகச் சண்டைபோடுவது அவ்வளவு சந்தோஷமான காரியமல்ல. அவர்களும் அதி தீரத்துடன் பலமாக எதிர்த்துக்கொண்டிருக்கிறார்கள். நேற்றைய தினம் மாலை, பல்மைரா (ஜெர்மானியர்கள் ஆகாய விமானத்தளமாக உபயோகித்த இடம்) சரணமடைந்தது. நூற்றுக் கணக்கான துருப்புகள் கைதியாகப் பிடிக்கப்பட்டார்கள். தீரே சோர் என்ற இடமும் நேற்று மாலை கைப்பற்றப்பட்டது. அநேக யுத்த சாமான்களும், ஆகாய விமானங்களும் பீரங்கிகளும் கைப்பற்றப்பட்டன.

### சந்தோஷப்படும்படியான நிலைமை.

"மேற்குப் பாலைவன யுத்தத்தில், நிலைமை சந்தோஷகரமாக இருக்கிறது. சமீபத்தில் நடந்த சண்டைக்குப்பிறகு, எதிரி தீவிரமாகப்போர்புரியும் நிலைமையில் இல்லை ஏனென்றால் எதிரிதுருப்புகள் பலமாகத்தாக்கப்பட்டிருக்கின்றன. பல அருமையான 'டாங்கி'களை இழந்து நாம் திரும்ப சேர்ந்த போதிலும், எதிரிக்கும் சரியான நஷ்டத்தை நாம் உண்டாக்கியிருக்கிறோம். மேற்குப் பாலைவனத்துத் தளகர்த்தரை இப்போதுதான் பார்த்தேன்; அங்குள்ள துருப்புகளின் தைரியமும், மனவுறுதியும் உயர்ந்த நிலையில் இருக்கின்றன என்று அவர் கூறுகிறார். நமக்கு அசௌகரியங்களும் கஷ்டங்களும் இருந்தாலும் மத்திய கிழக்கரங்கத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகள் சந்தோஷப்படும்படியான நல்ல நிலையிலிருக்கின்றன என்று நான் நினைக்கிறேன்.

"ரஷ்ய-ஜெர்மன் யுத்தத்தினால், மத்தியகிழக்கரங்கத்தில் கொஞ்சம் ஓய்வு ஏற்பட்டிருக்கிறது. ஜெர்மானியர்கள் மத்திய கிழக்கரங்கத்தில் தங்களுடைய முழுபலத்தையும் உபயோகித்திருந்தால், நம்முடைய நிலைமை கஷ்டமானதாயிருக்கும். அவர்கள் சிரியாவிலும். இராக்கிலும், மேற்குப்பாலைவனத்திலும் தங்களுடைய முழு கவனத்தையும் செலுத்தி, ஆகாய விமானங்களையெல்லாம் இங்கே அனுப்பியிருந்தால் நம்முடைய நிலைமை மிகவும் கஷ்டமானதாயிருந்திருக்கும். கிரீட்டைச் சுலபமாகக் கைப்பற்றி, அங்கிருந்து ஆகாய விமானங்களின் உதவிகொண்டு சிரியாவுக்குப்போய், பிறகு இராக்கில் பிரவேசிக்கலாம் என்ற எண்ணத்துடன் ஜெர்மானியர்கள் இருந்தார்கள். கிரீட்டில் சரியான யுத்தம் நடந்து அவர்களுக்கு ஏராளமான நஷ்டங்கள் நேர்ந்திராவிட்டால், அவர்கள் நினைத்தபடியே செய்திருப்பார்கள். ஆனால் இப்போது ரஷ்ய-ஜெர்மன் யுத்தத்தினால், நமக்கு ஒரு சிறந்த சௌகரியம் ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய துருப்புகளுக்குச் சிறிது காலம் ஓய்வும் பயிற்சி பெறுவதற்கும் பலப்படுத்திக்கொள்வதற்கும் அவகாசமும், கிடைத்திருக்கின்றன. ஜெர்மானியர்கள் திரும்பிவருவதற்குள், நாம் சிரியாவைக்கைப்பற்றி, சிரியாவின் பாதுகாப்பையும், இராக்கின் பாதுகாப்பையும் பலப்படுத்திக்கொள்ள ஒரு நல்ல சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது.

### ரஷ்யாவின் பலம்.

"ரஷ்ய-ஜெர்மன் யுத்தம் எப்படி முடியும்? மத்திய கிழக்கரங்க நிலைமையில் அதன் நிரந்தரமான பலாபலன் என்ன?—இவைபோன்ற கேள்விகளுக்கு இப்போது சரியான பதில் சொல்வது முடியாத காரியம். ஜெர்மானியர்கள் காகசஸ் பிரதேசத்துக்குச் சென்று அங்கிருந்து போர் புரிவார்களா என்று இப்போது கூற இயலாது. ஏராளமான கஷ்டங்கள் இருப்பதால் அவர்கள் அம்மாதிரி செய்வது நடக்காத காரியம்போல் தோன்றுகிறது. திரும்பி மத்திய கிழக்கரங்கத்துக்கு வருவார்களா? அல்லது தாக்கும் முயற்சியில் ஈடுபடுவார்களா? அல்லது காகசஸ் பிரதேசத்திலேயே முயற்சி செய்வார்களா?—எதைப் பற்றியும் முடிவான அபிப்பிராயம் கூறுவதற்கில்லை. இந்த யுத்தத்தில், ஜெர்மானியர்களுடைய முயற்சிகளைக் கண்டுபிடிப்பது சற்று கஷ்டமாகவே இருந்து வந்தது.

"ரஷ்யாவின் எதிர்த்து நின்று போராடும் திறமையைப் பற்றி ஆரூடம் கூறுவதும் கஷ்டமான காரியம். ரஷ்யாவினுடைய பலம் அதன் ஏராளமான துருப்புகளிடத்திலும், அதன் பிரம்மாண்டமான விஸ்தீரணத்திலும் இருக்கின்றன."

---

## தைரியமும், திறமையும் காட்டிய இந்திய சிப்பாய்கள்.

### எரீட்ரியா யுத்தவீரர்களுக்குப் பதக்கங்கள்.

இத்தாலிய கிழக்காப்பிரிக்காவில் இந்தியத் துருப்புகள் தைரியமாகப் போர்புரிந்து வெற்றி பெற்றதற்காக, சில சிப்பாய்களுக்குப் பதக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. முக்கியமாக, எரீட்ரியா பிரதேசத்தில், இரண்டாவது பஞ்சாப் பட்டாளம் வெகு திறமையாகப் போர்புரிந்தது. சென்ற மார்ச்சு மாதம் 15, 16 தேதிகளில், தோலோ கொரோடாக் என்ற மலையின்மேலுள்ள கோட்டையைப் பிடித்த உடனே, இந்தப் பட்டாளம் செபான் மலைக்கு அனுப்பப்பட்டது. எதிரிகளின் தாக்குதல்களுக்கிடையில் செங்குத்தான மலையில் கஷ்டப்பட்டு சிப்பாய்கள் ஏறினார்கள். உணவு, தண்ணீர், வெடிகுண்டு சாமான்கள் எல்லாம் கையில் தாங்கிக்கொண்டு மிகப் பிரயாசையுடன் மலையின்மேல் ஏறினார்கள். 18, 19 தேதிகளில் மலைக்கோட்டையைத் தாக்கிய எதிரிகளை விரட்டியடித்தார்கள். அடுத்த வாரம் முழுவதும் எதிரிகள் பலமாகத் தாக்கினார்கள்; ஆனால் இந்தியத் துருப்புகள் கோட்டையை விடாமல் பாதுகாத்து வந்தன. 25-ந் தேதி நடந்த போரில். 'சாப்பர்ஸ் அண்டு மைனர்ஸ்' படை வழி செய்துகொண்டு, 'டாங்கி'கள் செல்வதற்கு உதவி செய்தன; கேரனுக்குப்போகும் பாதையில் ஒரு மலையை இந்தியத் துருப்புகள் பிடித்தன. கடுமையான போர் நடந்தது. பாரண்டு

சண்டையிலும், கசாலாவுக்கு எதிரில்நடந்த சண்டையிலும் இந்தப்பட்டாளம் திறமையுடன் போர் புரிந்தது. தைரியமும், திறமையும்காட்டிய இப்பட்டாளத்துக்கு 6 பதக்கங்கள் கொடுக்கப்பட்டன. பதக்கங்கள் பெற்ற சிலரைப் பற்றிய விபரங்கள் பின்வருமாறு :—

ஜமதார் அமார்சிங், 'இண்டியன் ஆர்டர் ஆப் மெரிட்' என்ற பதக்கத்தைப் பெற்றார். எதிரிகளின் யந்திர பீரங்கியையும் அதைச்சேர்ந்த சிப்பாய்களையும் இவர் தம் துருப்புகளுடன் தாக்கிக் கைப்பற்றினார். எதிரிகள் தாக்குதலால் விரட்டியடிக்கப்பட்ட இவர் மீண்டும் தம்முடைய துருப்புகளைச் சேகரித்து, எதிரிகளைத் தாக்கி முன்பு பிடித்த இடத்தை மீண்டும் பிடித்தார். இரவெல்லாம் எதிரிகள் விடாமல் தாக்கிக்கொண்டேயிருந்த போதிலும், தாம் கைப்பற்றிய இடத்தை இவர் விடவேயில்லை.

நாயக் அஜேயிப்கான், 'இண்டியன் டிஸ்டிங்விஷ்டு சர்விஸ் மெடலை'ப் பெற்றார். எதிரிகளின் யந்திர பீரங்கி வைத்திருந்த இடத்தைக் கைப்பற்றியபிறகு, தம்முடைய பட்டாளம் எதிரிகளை நன்றாக சுடுவதற்குச் சில ஏற்பாடுகள் செய்தார். செய்யும்போது, எதிரிகள் துப்பாக்கிகளால் சுட்டுக்கொண்டே இருந்தார்கள். இவருடைய தைரியம், சேபான் என்ற இடத்தைப் பிடிப்பதற்குப் பேருதவியாயிருந்தது.

நாயக் ஹர்பாலசிங்கும் இதே பதக்கத்தைப் பெற்றார். தன்னுடைய 'சின்ன ஹவில்தார்' கொல்லப்பட்டபோதும், இடைவிடாது துப்பாக்கி வெடிகள் வெடித்துக்கொண்டிருந்தபோதும், தைரியமாகச் சென்று போக்குவரத்து சாதனத்தைப் பழுது பார்த்து சரிப்படுத்தின பெருமை இவருடையது. எதிரிகள் சுட்டுக்கொண்டேயிருந்தபோது, வெடிகுண்டுகளினால் உடைக்கப்பட்ட ஒரு இடத்தை இவர் செப்பனிட்டு, சரி செய்தார்.

சிப்பாய் கன்ச டா என்பவருக்கும் இந்தப்பதக்கம் கொடுக்கப்பட்டது. எரீட்ரியாவிலும், முக்கியமாக கேரனிலும், இவர் தைரியமான வேலைகளைச் செய்தார். காயம்பட்ட ஒரு சிப்பாயை முதுகில் தூக்கிக்கொண்டு, எதிரிகள் சுட்டுக்கொண்டேயிருக்கும்போது, தைரியமாக வேறொரு இடத்துக்குக் கொண்டுபோய்ச் சேர்த்தார்.

## இந்திய கப்பற் படையின் வெற்றி.

### செங்கடல் தீவு பிடிக்கப்பட்டது : பைகள் நிறைய 'டாலர்' நாணயங்கள்!

ஏப்ரல் மீ ஒரு நாள் காலை ஒரு மராட்டியத் துருப்பு மசாவா துறைமுகத்திலிருந்து, நோக்ரா என்ற தீவை நோக்கி ஒரு சிறு யுத்தக்கப்பலில் சென்றது. ஒரு கப்பற்படை உத்தியோகஸ்தர், ஒரு ஹவில்தார், 12 சிப்பாய்கள், கப்பலில் இருந்தார்கள். இரண்டு மணிநேரத்துக்குப் பிறகு, கப்பல் தீவுக்கருகில் சேர்ந்தது. தீவில் இருந்த இத்தாலிய கவர்னர் வீட்டை நோக்கி, கப்பல் பீரங்கிகள் திருப்பப்பட்டன. கவர்னர் வீட்டுக் கொடி மரங்களில் சமாதானத்துக்கு அறிகுறியாக வெள்ளைக் கொடிகள் பறக்க விடப்பட்டன. இந்திய கடற்படை சிப்பாய்கள் கப்பலிலிருந்து இறங்கி கரைக்குப்போய், கவர்னருடன் நீண்ட நேரம் வாக்குவாதம் செய்தார்கள். கடைசியாக, 900 ஜெர்மானியர்களும், இத்தாலியர்களும் கைதிகளாக ஒப்படைக்கப்பட்டார்கள். அநேக யுத்த சாமான்கள் கைப்பற்றப்பட்டன. ஆனால் அவை பெரும்பாலும் துருப்பிடித்திருந்தன.

தீவில் இருந்த பணத்தையெல்லாம் கொடுத்துவிடும்படி கவர்னரைக் கேட்டார்கள். பணம் ஒன்றும் இல்லை என்று கவர்னர் நீலிக் கண்ணீர் வடித்தார். எங்கு தேடிப்பார்த்தாலும் ஒன்றும் கிடைக்கவில்லை. அடுத்த நாள் காலை, கவர்னரை வெறுத்த ஒரு இத்தாலியக் கைதி உண்மையைக் கூறிவிட்டான். தீவில் இருந்த பொக்கிஷத்தை எல்லாம் எடுத்துக்கொண்டு சில இத்தாலியர்கள் ஒரு படகில் ஏறி தீவின் அக்கரையிலிருந்து ஓட ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்று அவன் கூறினான். உடனே படை ஆபீசர், ஹவில்தார், மூன்று சிப்பாய்கள், ஒரு கடற்படை உத்தியோகஸ்தர், எல்லோரும் தீவின் அக்கரையிலுள்ள ஒரு கிராமத்துக்குச் சென்றார்கள். அங்கு 30 இத்தாலியர்களைக் கண்டார்கள். ஒரு சிப்பாயை அங்கு அவர்களுக்குக் காவலாக வைத்து, யாராவது அசைந்தால் உடனே சுடும்படி கட்டளையிட்டார்கள். இதற்குள் மூன்று இத்தாலியர்கள் கரையோரமாக ஓடுவது தெரிந்தது. அவர்களைத் துரத்திக் கொண்டு போய், துப்பாக்கிகளால் சுட்டதும் அவர்கள் கீழே விழுந்து படுத்துக்கொண்டே அவிழ்க்கப்பட்ட தங்களுடைய கால் சட்டைகளைத்தூக்கி, சரணமடைவதாக, ஆட்டினார்கள்.

இதெல்லாம் நடப்பதற்குள், ஒரு சிறு படகு தீவின் பொக்கிஷங்களைக் கொண்டு போய்க்கொண்டேயிருந்தது. கப்பல் சண்டையாகையால், இந்தியக் கப்பற் படையின் "சப்-லெப்டினண்டு" தலைமையின்கீழ், ஒரு சிறு துருப்பு புறப்பட்டது. கரையிலிருந்து 200 அடி தூரத்திலிருந்த ஒரு சிறு கப்பலில் ஏறி, இத்தாலியப் படகைப் பிடிப்பதற்கு முயற்சி செய்யப்பட்டது. அந்தப் படகு நெருங்கியதும், ஹவில்தார் யந்திர பீரங்கியை அதன்மேல் காட்டவே, வெள்ளைக் கொடிகள் படகின்மேல் பறக்க விடப்பட்டன. இத்தாலியப் படகில் ஏறிப்பார்த்ததில் ஒரு இத்தாலிய கவர்னர், ஒரு தளகர்த்தர், இரண்டு கர்னல்கள், பல மெய்க் காப்பாளர்கள் காணப்பட்டார்கள். படகில் ஆராய்ந்து பார்த்தபோது பல சாக்குப் பைகள் காணப்பட்டன. அவைகளில் நிறைய மேரியாதெரீசா தங்க "டாலர்"கள் இருந்தன. கைதிகளையும், கைப்பற்றப்பட்ட பொக்கிஷத்தையும், கப்பலில் ஏற்றி, தீவைச் சுற்றி, தங்களுடைய சொந்த யுத்தக் கப்பலுக்கு திரும்பிவந்து சேர்ந்தார்கள்.

இந்த விநோதமான கடற் சம்பவத்தைப் பார்த்த மராட்டியர்கள், ஏன் நாமும் இந்திய கப்பற் படையில் சேரலாகாது என்று பேசிக்கொண்டார்கள்.

## இரண்டு பிரதம தளபதிகள்.

மத்திய கிழக்கரங்கத்தின் தளபதியாக நியமிக்கப்பட்டிருக்கும் சர் கிளாட் ஆக்கின் லெக் யுத்த நிலைமையைப்பற்றி, சில முக்கியமான விஷயங்களைக் கூறியிருக்கிறார். அவர் இந்தியாவின் தளகர்த்தராக இருந்து ஸ்தாபனங்களை நிர்வகித்து ஒழுங்குபடுத்தும் சக்தியைக்காட்டியிருக்கிறார். மத்திய கிழக்கரங்கத்தில் அவருடைய திறமை போர்முனையில் வெற்றிக்கு அனுகூலமாக இருக்கும் என்று நம்பப்படுகிறது. அவர் கூறுவதாவது :—இன்னும் 12, 14, அல்லது 24 மாதங்களில் அமெரிக்க மனிதர்களுடைய உதவி இந்த யுத்தத்தில் வேண்டியிருக்கும். ஜெர்மனி இப்போது காகசஸ் வழியாகச் சென்று, பாகு எண்ணெய்ச் சாலைகளை நோக்கிச் செல்லும். இந்தியாவிலிருந்தும், மத்திய கிழக்கரங்கத்திலிருந்தும் போர்த்துருப்புகளைக் கொண்டுவரும்படி கட்டாயப்படுத்துவதுதான் ஜெர்மனியின் நோக்கம். துருக்கிகூட இதற்கு உதவிசெய்யும்படி கட்டாயப்படுத்தப்படலாம். ஆனால் மத்திய கிழக்கரங்கத்திலிருந்து, பால்கன்சை ஜெர்மன் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்க ஒரு சந்தர்ப்பம் நேர்ந்தாலும் நேரலாம். ஏனென்றால் பால்கன்ஸ் பிரதேசத்துமக்கள் ஜெர்மன் ஆட்சியின்கீழ் அதிக காலம் அமைதியுடன் இருக்கமாட்டார்கள்.

இந்தியாவின் பிரதம தளபதியாய் இப்போது நியமிக்கப்பட்டிருக்கும் ஜெனரல் சர் ஆர்ச்சிபால்ட் வேவெல் உலகப் பிரசித்திபெற்றவர் ; பொறுப்பான மகாபெரிய வேலைகளைச்செய்து முடித்தவர் ; பலதிறப்பட்ட இடங்களிலும், சந்தர்ப்பங்களிலும், ஐந்து சண்டைகளை திறமையாக நடத்திய நிபுணர் ; அவருக்கு ரஷ்யாவைப்பற்றி முதல்தர அனுபவம் உண்டு ; ரஷ்யபாஷையும் நன்றாகப் பேசுபவர் ; மத்திய கிழக்கரங்கத்தில் யுத்த 'சப்ளை' பிரச்சினைகளை நன்கு ஆராய்ந்து அறிந்தவர். அவருடைய பரந்த அறிவும், விசாலமான அனுபவமும் போர்த்திறமையும், உயர் குணங்களும் இந்தியாவின் பாதுகாப்புக்கு மிகவும் உபயோகமாயிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

**குறிப்பு.**—யுத்த சஞ்சிகையின் பிரதிகளைத் தயவுசெய்து ஒன்றின்பின் ஒன்றாக விடாமல் சேர்த்துவரவும்.
[சென்னை இன்பர்மேஷன் டைரெக்டர் அவர்களால் அன்புடன் அளிக்கப்பட்டது.]

MADRAS : PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.